# பதவிய பிரதேச சபை
# அநுராதபுர மாவட்டம்

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 29 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மே 07 ஆம் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பதவிய பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் மற்றும் அதன் மூலம் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்பட்டிருந்த தாக்கம் தொடர்பான பொழிப்பொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| | குறைபாடுகளின் தன்மை | விடயங்களின் எண்ணிக்கை | நிதிக்கூற்றுக்கள் மீதான தாக்கம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | வருமானம் | செலவினம் | சொத்துக்கள் | பொறுப்புக்கள் |
| | | | ரூபா. 000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| (அ) | நிதிக்கூற்றுகளில் அதிகரித்துக் காட்டுதல்கள் | 01 | 37 | - | - | - |
| | - மேற்படி - | 01 | - | 37 | - | - |
| (ஆ) | நிதிக்கூற்றுகளில் குறைத்துக் காட்டுதல்கள் | 04 | - | 164 | - | - |
| (இ) | நிதிக்கூற்றுகளிலிருந்து விடுபாடுகள் | 05 | - | - | 2,754 | - |
| (ஈ) | நிதிக்கூற்றுகளில் முறையற்ற வெளிப்படுத்தல் | 01 | 612 | - | - | - |
| | - மேற்படி - | 02 | - | - | 37 | - |
| | - மேற்படி - | 01 | - | - | - | 1,056 |

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

02 கணக்கு விடயங்களுக்குரிய கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,280,155 ஆக இருந்ததுடன் உபயோகப் பதிவேடுகள் / அறிக்கைகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,363,030 ஆக இருந்தது.

### 1.3.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பிரதான பேரேட்டின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வீதி விளக்குகள் இருப்புக் கணக்கின் மீதி ரூபா 156,286 ஆகவும் அத்திகதியில் தயாரிக்கப்பட்டிருந்த ஐந்தொகையில் அது 216,285 ஆகவும் காட்டப்பட்டிருந்ததுடன் அவ்வேறுபாட்டிற்கான காரணம் விளக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 தொங்கல் கணக்கு

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தொங்கல் கணக்கு வரவு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 486,839 ஆக இருந்தது.

### 1.3.5 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஒரு வருட காலத்தினை விஞ்சியிருந்த செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 113,088 ஆக இருந்தது.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றின்மை

**தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 5,275,442 கூட்டுத்தொகையான 10 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த / மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது.

### 1.3.7 இணக்கமிண்மைகள்

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாண அறிவுறுத்தல்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பனவற்றிற்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானம் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவை | |
| (i) இல 115 | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுடன் களஞ்சிய மற்றும் இருப்புப்பதிவேட்டில் பொருட்கள் கிடைத்தமைக்கான உறுதிப்படுத்தல்கள் காணப்பட வேண்டிய |

| | | |
|---|---|---|
| | | போதிலும் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 205,777 தொகையான பொருட்கள் தொடர்பாக அவ்வாறான உறுதிப்படுத்தல்கள் இன்றி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) | இல. 163 | வருடத்தின் வருமானத்தைக் கணிப்பீடு செய்வதற்காக பொழிப்பு வருமானப் பதிவேடு (பி.ச.19) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

### 1.3.8 போலியான சொத்துக்கள்

மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பொதுக்களஞ்சிய மீதி ரூபா 42,783 எனக் காட்டப்பட்டிருந்த போதிலும் 2011 ஆகஸ்ட் 05 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவ்வாறான இருப்பொன்று சபைக்குச் சொந்தமாகக் காணப்படாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 596,614 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 62,472 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டும் முன்னைய ஆண்டின் பொருட்டும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | 2010 மதிப்பிடப் பட்ட | 2010 உள்ளவா றான | 2010 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | 2009 மதிப்பி டப்பட்ட | 2009 உள்ள வாறான | 2009 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (அ) | வீதவரியும் வரியும் | 225 | 124 | - | 173 | 173 | - |
| (ஆ) | வாடகை | 595 | 612 | - | 627 | 627 | - |
| (இ) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 360 | 388 | 2 | 373 | 373 | 02 |
| (ஈ) | ஏனைய வருமானம் | 1,843 | 1,833 | - | 5,089 | 4,367 | 712 |

### 2.2.2 நிதிமன்றத் தண்டப்பணம்

பல்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதவான் நீதிமன்றத்தினால் 2010 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டு பிரதம செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ள ரூபா 60,471 ஆன தண்டப்பணம் சபைக்கு கிடைக்க வேண்டியிருந்தது.

### 2.2.3 வீதவரிகள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134(1) ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபை அதிகாரசபைக்குட்பட்ட அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டு அப்பிரதேசங்களில் அமைந்துள்ள அசைவற்ற ஆதனங்களிலிருந்து வருடாந்த மதிப்பீட்டு அடிப்படையில் வீதவரியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் ஸ்தாபிக்கப்பட்டிருந்த 04 தொலைபேசிக் கம்பங்களிலிருந்து 2008 ஆம் ஆண்டு தொடக்கம் அனுமதிப்பித்திரக் கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 ஏனைய வருமானம்

பிரதேச சபைக்குரிய தண்ணீர் பௌசர் தினமொன்றுக்கு ரூபா 6,000 படி அறவிடப்பட்டு வாடகைக்கு விடப்படுகின்ற போதும் 2010 ஆம் ஆண்டில் குள செயற்திட்டங்களுக்காக 22 தினங்கள் ஓடிய 466 கிலோமீற்றர்களுக்காக எவ்வித பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. சபையினால் அறவிட வேண்டியிருந்த ரூபா 132,000 தொகையினை அறவீடு செய்வதற்காக போதுமானவு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை.

### 2.2.6 கடை வாடகை

உள்ளூராட்சி ஆணையாளரின் 1994 ஆகஸ்ட் 04 ஆந் திகதிய என்சீபீ/கேஜீ/9/7/19 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் பிரதான மதிப்பீட்டாளர் அல்லது உள்ளூராட்சி சேவைக்குரிய மதிப்பீட்டாளர்களின் மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு மாதாந்த கடை வாடகை தீர்மானிக்கப்பட வேண்டியிருந்ததுடன் 05 வருடங்களுக்கு ஒரு தடவையாவது மதிப்பீட்டு வாடகை திருத்தம் செய்யப்பட வேண்டியிருந்தும் சபைக்குச் சொந்தமான கடைகளின் வாடகைகள் 09 வருடங்களுக்கும் அதிகமான காலத்திலிருந்து வேறுபாடின்றிக் காணப்பட்டது.

### 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறான செலவினமும் உரிய முரண்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதீடு செய்யப்பட்டது | உள்ளவாறான | முரண் | பாதீடு செய்யப்பட்டது | உள்ளவாறான | முரண் |
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| **மீண்டுவரும் செலவினம்** | | | | | | |
| ஆளணி வேதனம் | 5,300 | 5,288 | 12 | 4,500 | 4,096 | 404 |
| ஏனையவை | 2,300 | 2,277 | 23 | 2,500 | 2,228 | 272 |
| உப மொத்தம் | 7,600 | 7,565 | 35 | 7,000 | 6,324 | 676 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மூலதனச் செலவினம் | - | 17,625 | (17,625) | - | 4,838 | (4,838) |
| மொத்தம் | 7,600 | 25,190 | (17,590) | 7,000 | 11,162 | (4,162) |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவி அணி

2010 திசெம்பர் 31 இல் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி மற்றும் உள்ளவாறான பதவி அணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | பதவியினர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான |
|---|---|---|---|
| (அ) | பதவி நிலைத்தரங்கள் | 02 | 01 |
| (ஆ) | இரண்டாம்தரங்கள் | 07 | 04 |
| (இ) | ஆரம்ப தரங்கள் | 06 | 06 |
| (ஈ) | வேறு (அமைய / தற்காலிக) | -- | 04 |
| | மொத்தம் | 15 | 15 |

## 2.5 சொத்துக்களின் முகாமைத்துவம்

### 2.5.1 செயற்பாடற்ற பௌதீக வளங்கள்

வடமத்திய மாகாண சபையின் பிரதம அமைச்சினால் அரிசி மாவுடன் அண்மித்த பேக்கரி உற்பத்திகளை பிரபல்யப்படுத்தும் செயற்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்காக 2007 ஆம் ஆண்டில் சபைக்கு ரூபா 814,000 பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தும் உரிய செயற்திட்டம் ஆரம்பிக்கப்பாமையினால் அவ் உபகரணங்கள் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

### 2.5.2 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 686,828 ஆக இருந்ததுடன், 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட அறவீடுகள் நிலுவையாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,475 ஆக இருந்தது.

### 2.5.3 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

பௌதீக பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தப்படாத 2010 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு புத்தகப் பெறுமதி அடிப்படையில் கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 5,275,443 ஆக இருந்தது.

## 2.6 போதியளவு அதிகார பலத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

மீளாய்வாண்டின் போது பரிசுகளுக்காக செலவு செய்யப்பட்டிருந்த ரூபா 104,875 தொகைக்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132(ஏ) பிரிவின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 2.7 செயலாற்றல்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 03 ஆவது பிரிவின் பிரகாரம் பிரதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தின் மக்களின் வசதி நலன்புரி செயற்பாடுகள், சுகாதாரம், பாதைகள் மற்றும் பொது உபயோக சேவைகளுக்குரிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக எதிர்வரும் ஆண்டுகளில் செயற்பாடுகளுக்குரிய திட்டங்களை உள்ளடக்கிய கூட்டுத்திட்டத்தை மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்படுத்துவதற்கு எதிர்ப்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான செயல் நடவடிக்கைத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.8 ஒப்பந்த நிருவாகம்

### செயற்திட்டங்களை அமுல்படுத்துவதில் தாமதம்

(அ) 2009 இன் வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த கீழே குறிப்பிடப்படும் வீதி அபிவிருத்தி செயற்திட்டங்கள் கணக்காய்வுத் திகதியான 2011 யூலை 31 வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிராததுடன் ஒப்பந்தச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 1,637,000 தொகையான முற்பணம் அவர்களினால் செய்யப்பட்ட ஏனைய வேலைகளுக்கான கொடுப்பனவுகளினால் தீர்க்கப்பட்டிருந்தது.

| | வீதியின் பெயர் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை | செலுத்தப்பட்ட முற்பணம் |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| 1 | வங்கிச் சந்தியிலிருந்து ஸ்டுடியோவரை | 1,496,496 | 200,000 |
| 2 | வைத்தியசாலை அருகிலிருந்து பிரதீப் மோட்டர்ஸ் வரை | 1,482,095 | 200,000 |
| 3 | புபுது ஸ்டுடியோவிலிருந்து கீழ் வாய்க்கால் வரை | 593,838 | 119,000 |
| 4 | வைத்தியசாலை அருகிலிருந்து சுசந்த அவர்களின் வீடு வரை | 1,482,096 | 200,000 |
| 5 | பராக்கிரமபுர இலிருந்து இடதுபக்க வீதிக்கு ஓரக்காண் | 593,833 | 118,000 |
| 6 | மணிக்கூட்டுக் கோபுரம் அருகிலிருந்து ஆசிரியர் ஆலோசனை நிலையம் வரை | 1,482,096 | 200,000 |
| 7 | பிரதீப் மோட்டர்ஸ் அருகிலிருந்து மணிக்கூட்டுக் கோபுரம் வரை | 1,482,096 | 200,000 |
| 8 | சுபசிறி ஹோட்டல் அருகிலிருந்து மதகு வரை | 1,482,096 | 200,000 |
| 9 | உப வீதி வளைவு | 1,251,343 | 200,000 |
| | | 11,345,989 | 1,637,000 |

(ஆ) பின்தங்கிய உள்ளூராட்சி நிறுவனங்களைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பராக்கிரமபுர 04 ஆம் கட்டையில் சபைக்குச் சொந்தமான காணியில் முன் பள்ளிப்பாடசாலையொன்று நிர்மாணிப்பதற்காக 2007 ஆம் ஆண்டின் போது ரூபா 417,150 தொகையில் மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. அதற்காக உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சிலிருந்து ரூபா 317,150 ஆன நிதியேற்பாடு கிடைத்திருந்ததுடன் எஞ்சிய ரூபா 100,00 தொகையானது சபை நிதியத்திலிருந்து செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இவ்வேலைகளுக்காக 2008 மார்ச் 08 ஆந் திகதி வரையில் ஒப்பந்தச் சங்கமான அறுண கிராமிய சமுர்த்தி படையணிக்கு ரூபா 240,477 தொகை வழங்கப்பட்டிருந்தது. 2008 பெப்ரவரி 20 ஆந் திகதிய ஒப்பந்தத்தின் பிரகாரம் 2008 மே 20 ஆந் திகதி நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2011 யூலை 31 வரையிலும் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.9 உள்ளகக் கணக்காய்வு

நிறுவகத்தினுள் போதுமானளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்.